# 12 எனது நூலை யாரால் கண்டுபிடிக்க முடியும்?

**இலக்கு**

*இப்புதிய எண்ணக்கருவுடன், மாணவர்கள் புதிய புத்தகங்களையும் பாடங்களையும் பற்றி கற்றுக் கொள்வதோடு, வாசிக்கவும் தூண்டப்படுவர். மாணவர்கள் ஒரு பக்கத்தை தெரிவு செய்து வாசிக்கும் போது அவ் விடயத்தை ஆழமாக உள்வாங்குவதோடு சரியாக வாசிக்கவும் ஆழமாக செவிமடுக்கவும் பழகிக் கொள்ள வேண்டும்.*

1ம் - 9ம் தரம் | 60 மணித்துளிகள்



**கருவிகள்:**
தெரிவு செய்த வெவ்வேறு நூல்களும் எழுத்துருக்களும் (படநூல்கள், அகரமுதலிகள், சஞ்சிகைகள் போன்றன) எழுத்துருக்கள் ஆசிரியராலோ மாணவர்களாலோ வழங்கப்படலாம்.

**செயல்முறை:**

- ஒவ்வொரு மாணவனும் / மாணவியும் ஒரு நூலை அல்லது எழுத்துருவைத் தெரிவுசெய்கிறான் / ள் அது என்ன நூல் என்பதை மற்றவர்கள் பார்க்காமல் இருக்கவேண்டும். புதிய மாணவர்கள் பட நூல் ஒன்றைத் தெரிவு செய்யலாம்.
- மாணவர்கள் "மறைவாக" தங்கள் நூல் தலைப்பினைப் பதிவதற்கு ஆசிரியர் பட்டியல் ஒன்றை ஆக்குவார்.
- மாணவர்கள் தலைப்பினை மறைப்பதற்கு தங்கள் நூலை ஓர் உறையினுள் இடுவர்.
- மாணவர்கள் தம் நூலிலிருந்து வகுப்புக்கு உரத்துப் படிப்பதற்காகப் பொருத்தமான ஒரு பந்தியைத் தேடுவர் (பந்தி கவர்ச்சியானதாகவும் சுவையானதாகவும் இருக்கும் அதே வேளை, நூல் பற்றிய எல்லாவற்றையும் எடுத்துக்காட்டி விடக்கூடாது). பொருத்தமான பந்தியைத் (அளவு: 1 / 3 - 1 பக்கம்) தெரிதல் எழுத்துருவின் ஆழமான தேர்வினை வேண்டிநிற்கும்.
- உரத்து படித்தலுக்குப் பயிற்சி செய்யவேண்டும்! உரத்துப் படித்தலுக்குப் பயிற்சி செய்ய மாணவர்களுக்கு போதுமான அளவு நேரத்தைப் பெறுவர் (வகுப்பறைக்கு வெளியே விரும்பத்தக்கது). இது வீட்டு வேலையாகவும் வழங்கப்படலாம். பட நூலைத் தெரிவு செய்யும் புதிய மாணவர்கள் அதிலுள்ள படமொன்றைப் பற்றி தெளிவாக விவரிப்பதற்குப் பணிக்கப்படுவர்.
- பின்னர் மாணவர்கள் தாம் தெரிவு செய்த பந்தியை வகுப்பில் படிப்பர் (அல்லது தெரிவுசெய்த படத்தை விவரிப்பர்). கேட்பவர்கள் அது எந்த நூலுக்குரியது அல்லது நூலின் வகை(திரில்லர், கற்பனையல்லாத கதை, கற்பனை கதைகள் போன்றன) என்ன என்பதை ஊகிக்க முயல்வர். மேலே உரத்துப் படிப்பதற்கான தலைப்புகள் மற்றும் நூலை ஊகிக்கும் பயிற்சிகளை 2-3 பாடங்களுக்கு மேலே பகிர்ந்துகொள்ளலாம்.

**குறிப்புகள்:**

இச் செயற்பாடானது ஒரு சிறிய போட்டியாகவும் நிகழ்த்தப்படலாம். சரியான தலைப்பை முதலில் கண்டுபிடிப்பவர் வெற்றி பெறுவார்.

**மாற்று முறைகள்:**

இச் செயற்பாடானது பல்வேறு வழிகளில் வேறுபடலாம். எடுத்துக்காட்டாக,

- பள்ளி மொழியில் எழுதப்பட்ட நூல்களையும் பயன்படுத்தலாம் இருப்பினும் முதல் மொழியிலேயே எடுத்துரைக்கப்பட வேண்டும்.
- ஆண்டு இறுதியில், ஆசிரியர் அந்த ஆண்டு முழுவதும் நூல்களிலிருந்து எடுத்து வகுப்பில் கலந்துரையாடிய பந்திகளை படிப்பார். அவை எந்த எழுத்துருவிலிருந்து எடுக்கப்பட்டன?
- அனைத்து தலைப்புப் பக்கங்களும் ஒரு தாளில் படியெடுக்கப்பட்டு இலக்கம் இடப்படும். மாணவர்கள் பந்திகளை அவற்றிற்குரிய தலைப்புப் பக்கங்களுடன் தொடர்புபடுத்துவர்.
- ஒரு குறிப்பிட்ட வகை பாடத்திற்கு தெரிவானது மட்டுப்படுத்தப்பட்டது (புனைகதைத் தலைப்புக்கள், உண்மை எழுதுருக்கள், கவிதைகள், கற்பனைக் கதைகள்…).

- மாணவர்கள் பெற்றோர் மாலை நிகழ்வில் எழுத்துருப் பந்திகளைப் படிப்பர். பெற்றோரும் ஒரு நூற் பட்டியலைப் பெறுவர், ஊகிக்க வேண்டும்.
- மாணவர்கள் தமக்கு மிகவும் பிடித்த நூல்களை வகுப்புக்கு எடுத்து வந்து அதிலிருந்து வகுப்புக்குப் படிப்பர்.
- பெற்றோர், உறவினர்கள் மற்றும் ஏனைய ஆசிரியர்கள் அவர்களுக்கு பிடித்த நூல்களிலிருந்து ஒரு பந்தியைப் படிக்க அழைக்கப்படுவர்.

# 13 விடுகதை முடிச்சு

**இலக்கு**

*ஒரு நூலுக்கு அல்லது எழுத்துருவுக்கு விடுகதைகளைத் திரட்டுதற்கு, மாணவர்கள் எழுத்துருவின் விவரங்களிலும் திறவுப் பந்திகளிலும் கண்காணிப்புச் செலுத்தி கருவியினை மிக நெருக்கமாகப் படிக்க வேண்டும். விடுகதைகளை விடுவிப்பது சிறப்பாக இளம் பிள்ளைகளை படிப்பதற்குத் தூண்டுகின்றது.*

2ம் - 9ம் தரம்

60 மணித்துளிகள்

**கருவிகள்:**
எழுத்துருக்கள் (நீண்ட கதைகள் அல்லாதவை, சஞ்சிகைகள் அல்லது இணையத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட கட்டுரைகள், சிறுவர்களுக்கான பட நூல்கள்) கடதாசித் தாள்கள், கத்தரிக்கோல், கம்பி.

**செயல்முறை:**

- தனியாள் வேலை: ஏற்கனவே தயார் செய்யப்பட்ட நூல் தொகுதியிலிருந்து மாணவர்கள் தம்மைக் கவரும் எழுத்துரு ஒன்றைத் தெரிவு செய்து அதை உன்னிப்பாக படித்து பாடத்தின் உட்பொருளை விளங்கிக் கொண்ட பின் விடையளிக்கக் கூடியவாறான வினாக்களை உருவாக்குவர்கள். எடுத்துக்காட்டுகள்: விடுமுறைக்குப் பின்னர் பள்ளியின் தொடக்க நாளில் கதாநாயகன் அணிந்த ஆடை என்ன? முதன்மைக் கதாப்பாத்திரத்தின் தந்தையின் பெயர் என்ன? ஆறு ஓலு திசைகாட்டியின் எத்திசை வழியே பாய்கின்றது?.
- இவ் வினாக்கள் தாளொன்றில் எழுத்துருவில் விடையளிக்கப்பட்ட வரிசையில் எழுதப்படும். ஒவ்வொரு வினாவின் கீழும் விடையெழுதுவதற்கு போதியளவு இடம் வழங்கப்படவேண்டும் (அதே தாளில் அல்லது இணைக்கப்பட்ட வெற்றுத்தாளில்).
- இக்கடதாசித் தாள்கள் நூலொன்றில் இணைக்கப்படும். இரு மாணவர்கள் நூலில் இணைக்கப்பட் விடுகதைகளையுடைய எழுத்துருக்களை பரிமாறிக்கொள்வர்.




- மாணவர்கள் மற்றவர்களிடமிருந்து பரிமாறப்பட்ட புத்தகத்தை அல்லது எழுத்துருவைப் படித்து (வீட்டுப்பாட ஒப்படையாக) விடுகதை முடிச்சிலுள்ள வினாக்களுக்கு விடையளிக்க முயற்சி செய்வர். பாடங்கள் படிக்கப்பட்டபின் விடைகள் ஒப்பிடப்படும்.
- மேலும் விடுகதைகளுக்கு விடையளிக்க விரும்புவோர் வேறு எழுத்துருக்களையும் அவற்றிற்குரிய விடுகதை முடிச்சுகளையும் ஏனைய மாணவர்களிடமிருந்து பெறலாம்.

**குறிப்புகள்:**

- "விடுகதை முடிச்சு" கருத்திட்டம் பல் கிழமைகளுக்கு நீட்டிக்கப்படலாம்.
- சரியாக எழுதவும் வாசிக்கவும் முடியாத சின்னஞ்சிறார்களுக்கு, இச் செயற்பாடானது பட நூல்களைப் பயன்படுத்தி மூத்த மாணவன் ஏற்படுத்திய விடுகதையைக் கொண்டு நிகழ்த்தப்படலாம்.